தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2018 - 2019

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

## விடைகள்

சுட்டெண்:.............................................................

நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. 34 ஆண்டுகள் வலிமையான ஆட்சி நடத்திய மன்னன்

அ) சங்கிலியன் ☐ ஆ) இராவணன் ☐
இ) கயிலைவன்னியன் ☐ ஈ) பண்டாரவன்னியன் ☐

2. பின்வருவனவற்றுள் உயிர்மெய்யெழுத்து அல்லாதது

அ) ற் ☐ ஆ) கொ ☐
இ) ம ☐ ஈ) மை ☐

3. படர்க்கை வினைமுற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பாடினாய் ☐ ஆ) கூறுங்கள் ☐
இ) வந்தீர்கள் ☐ ஈ) பறந்தன ☐

4. துளைக்கருவிகளில் ஒன்று

அ) தண்ணுமை ☐ ஆ) புல்லாங்குழல் ☐
இ) தாளம் ☐ ஈ ) வீணை ☐

5. கதிரமலை என்ற இடத்தின் வேறு பெயர்

அ) பூநகரி ☐ ஆ) மன்னார் ☐
இ) கந்தரோடை ☐ ஈ ) பனங்காமம் ☐

6. கற்ற எனும் சொல்

அ) பெயரெச்சம் ☐ ஆ) வினைமுற்று ☐
இ) வினையெச்சம் ☐ ஈ ) பெயர்ச்சொல் ☐

7. பெரும் புயலோடு பெய்த மழையினால் ஆறு ________ இன்றிப் பெருக்கெடுத்து ஓடியது.

அ) கங்கு கரை ☐ ஆ) ஈடு இணை ☐
இ) அல்லும் பகலும் ☐ ஈ) ஊண் உறக்கம் ☐

8. "அரசனைக் காட்டிலும் கற்றவர்கள் சிறப்புடையோர்கள்" எனக் கூறியவர்

அ) ஔவையார் ☐ ஆ) பாவேந்தர் ☐
இ) கபிலர் ☐ ஈ) பாரதியார் ☐

9. **பழமொழி:** அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை என்பது

அ) வலிமை அற்றோரும் ஒன்று கூடின் வலிமை பெறுவர். ☐
ஆ) ஒற்றுமை நலன் விளைவிக்கும். ☐
இ) வறுமையிலும் செம்மையாய் இரு. ☐
ஈ ) மன நிறைவற்ற நிலை ☐

10. வீரமுரசம் வைக்கும் கட்டிலில் ________ மலர்கள் நிறைந்திருந்தன.

அ) வெண்ணிற ☐ ஆ)வென்னிற ☐
இ) வெந்நிற ☐ ஈ) வெள்ளிற ☐

11. மழை இன்மையால் குளங்கள் ________ வெடித்துக் காணப்பட்டன.

அ) பாளம்பாளமாக ☐ ஆ) அணிஅணியாக ☐
இ) கற்றைகற்றையாக ☐ ஈ) கண்ணுங்கருத்துமாக ☐

12. திறை என்ற சொல் குறிப்பது

அ) நிலத்தை ஆ) வானத்தை

இ) வரியை ஈ) ஆட்சியை

13. மருது பாண்டியனின் தீரச் செயல்களுக்கான பட்டயம் வழங்கப்பட்ட ஆண்டு

அ) 2006 ஆ) 2005

இ) 2008 ஈ) 2009

14. நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்ட பிரிங்கர் பிறந்த நாடு

அ) இத்தாலி ஆ) ஒல்லாந்து

இ) பிரான்சு ஈ) பிரித்தானியா

15. இலக்கியன் திருதிரு என்று விழித்தான். இதில் வரும் திரு திரு என்பது

அ) அடுக்குத் தொடர் ஆ) அடுக்கிடுக்குத் தொடர்

இ) இணைமொழி ஈ) இரட்டைக் கிளவி

16. தடங்கரை என்பதைப் பிரித்து எழுதினால்

அ) தடம் + கரை ஆ) தட + கரை

இ) தடு + கரை ஈ) தடங் + கரை

17. பூநகரிக்கு நிகராக விளங்கிய தலைநகர்

அ) கதிரமலை ஆ) திருகோணமலை

இ) முல்லைத் தீவு ஈ) பொம்பரிப்பு

18. **மோட்டை** என்ற சொல் குறிப்பது

அ) மழையை ☐ ஆ) நிலைத்திணையை ☐

இ) நீர் நிலையை ■ ஈ) வன்னி மண்ணை ☐

19. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம்

அ) அன்புடைமை ☐ ஆ) வெகுளாமை ■

இ) கல்லாமை ☐ ஈ ) பொச்சாவாமை ☐

20. கயிலைவன்னியனுக்கு அஞ்சி கோட்டைகளை அமைத்தவர்கள்

அ) போர்த்துக்கேயர் ■ ஆ) ஒல்லாந்தர் ☐

இ) ஆங்கிலேயர் ☐ ஈ ) வன்னியர் ☐

21. கண்டி அரசனால் சிறைப்பிடிக்கப்பட்டு, சிறையில் இருந்து தப்பி ஓடிய ஆங்கிலேயன்.

அ) யே. பி. லூயிசு ☐ ஆ) றொபேட் நொக்சு ■

இ) தோமசு வான்றி ☐ ஈ ) இ. தொலமி ☐

22. அழகிய சிறுமி அழகான சட்டை அணிந்திருந்தாள். இதில் வரும் செயப்படுபொருள் அடைமொழி

அ) அழகிய ☐ ஆ) அழகான ■

இ) அணிந்திருந்தாள் ☐ ஈ) சட்டை ☐

23. கங்காரு விரைவாக ஓடும். இச்சொல்லியம்

அ) மெய்ப்பாடு ☐ ஆ) கூற்று ■

இ) வினா ☐ ஈ) ஏவல் ☐

24. குறைவினையை ______________ என்றும் அழைப்பர்.

அ) குறிப்புவினை ☐ ஆ) எச்சவினை ■

இ) ஏவல்வினை ☐ ஈ) வினைமுற்று ☐

25. இசைக்கலை பற்றி மிகவும் விரிவாகக் கூறும் நூல்

அ) சிலப்பதிகாரம் ■ ஆ) மூதுரை ☐

இ) நாலடியார் ☐ ஈ) மணிமேகலை ☐

26. பின்வருவனவற்றுள் நீர்ப்பறவை

அ) கிளி ☐ ஆ) மயில் ☐

இ)ஆலா ■ ஈ ) புறா ☐

27. கஞ்சமகள் எனக் குறிப்பிடப்படுவது

அ) தாமரை ■ ஆ) அல்லி ☐

இ) முல்லை ☐ ஈ ) மல்லிகை ☐

28. "துஞ்சு மேதி சுறாக்களைச் சீற" எனும் பாடலில் மேதி என்பது

அ) பெண்எருமை ■ ஆ) தாமரைப் பூ ☐

இ) வயல் ☐ ஈ) பலாக்கனி ☐

29. நல்லவர்க்குச் செய்த உதவியானது ______________ எழுதிய எழுத்துப் போன்றது.

அ) மண்ணில் ☐ ஆ) நீரில் ☐

இ) கல்லில் ■ ஈ) காற்றில் ☐

30. விழுந்து என்பது

அ) பெயரெச்சம் ☐ ஆ) வினையெச்சம் ■

இ) வினைமுற்று ☐ ஈ) வினையடி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

முன்பு, தமிழகம் சேர சோழ பாண்டிய நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுகளைத் தமிழ் மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் வீரமும் மதிநுட்பமும் உடையவர்கள். சேரநாட்டைச் சேரமன்னர்கள் ஆண்டு வந்தனர். அந்நாட்டுக் கொடியில் வில் பொறிக்கப்பட்டிருந்தது. சேரமன்னர்களில் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் போன்றோர் புகழ் பெற்று விளங்கினர். சோழர்களில் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் சிறந்த மன்னர்கள் ஆவர். இராசேந்திரசோழன் வலிமையான கப்பற்படையை வைத்திருந்தான். இவன் கப்பற்படையின் உதவியுடன் தென்கிழக்காசிய நாடுகளை வென்றான். இவர்களது கொடி புலிக் கொடியாகும். பாண்டிய நாட்டைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டனர். இவர்களது கொடி மீன் கொடியாகும். இவர்கள் மதுரையில் கழகம் அமைத்து முத்தமிழையும் வளர்த்தனர்.

1. தமிழ் மன்னர்கள் எத்தகையவர்கள்?

   *தமிழ் மன்னர்கள் வீரமும் மதிநுட்பமும் உடையவர்கள்.*

2. புகழ்பெற்ற சேர அரசர்கள் யாவர்?

   *புகழ்பெற்ற சேர அரசர்கள் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன்.*

3. இராசேந்திரசோழன் எதன் உதவியுடன் தென்கிழக்காசிய நாடுகளை வென்றான்?

   *இராசேந்திரசோழன் கப்பற்படையின் உதவியுடன் தென்கிழக்காசிய நாடுகளை வென்றான்.*

4. பாண்டிய மன்னர்கள் எங்கே கழகம் அமைத்தனர்?

   *பாண்டிய மன்னர்கள் மதுரையில் கழகம் அமைத்தனர்.*

5. தமிழகம் முன்பு எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது?

   *தமிழகம் முன்பு சேர சோழ பாண்டிய நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.*

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பயன் கருதாமல் செய்தவரின் உதவி எதைப்போன்றது என வள்ளுவர் கூறுகிறார்?

   *கடலைப்போன்றது*

2. நன்னெறிப்பாடலில் சினங்காத்தலுக்கு ஒப்பிடப்படும் செயல் எது?

   *வெள்ளத்தைத் தடுக்கும் செயல்*

3. வன்னி மக்களின் தனித்தன்மை யாது?

   *போர்வலிமையும் உணர்வும்/வீர உணர்வு*

4. யே.பி லூயிசு எழுதிய 'வன்னிக்குறிப்பு' நூலின்படி வன்னியின் எல்லைகள் யாவை?

   *வடக்கே யாழ்ப்பாணம், கிழக்கே திருகோணமலை, தெற்கே அநுராதபுரம், மேற்கே மன்னார்*

5. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
   சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு - இக்குறளின் பொருளை எழுதுக.

   *எதைக் காக்க முடியாவிட்டாலும் நாவைக் காக்கவேண்டும். அவ்வாறு காப்பாற்றாவிடில் சொற் குற்றத்திற்கு உட்பட்டுத் துன்பப்படுவர்.*

6. கொட்டுகின்ற முரசு வைக்கும் கட்டிலென்று அறியாது படுத்துறங்கிய புலவர் யார்? அவர் யாரைக் காணச் சென்றார்?

   *மோசிகீரனார். சேரமன்னனை*

7. வன்னியின் ஊர்கள், குளங்கள் ஆகியவற்றின் பண்டைய பெயர்கள் காட்டுவது என்ன?

   *தமிழர் அங்கு வாழ்ந்தனர். / தமிழரின் தொன்மையான மண்.*

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

# தாய்மொழி

| | | | | |
|---|---|---|---|---|
| வீட்டுமொழி | மலைத்து | வெட்கமில்லையா | பெருமை | தொலைத்து |

தமிழ் படிப்போம் தமிழ் படிப்போம்

தம்பி தங்கையரே -நாங்கள்

தமிழரென்று ___பெருமை___ கொள்வோம்

அன்பு நண்பரே!

தமிழறியாத் தமிழரென்றால்

___வெட்கமில்லையா___ - நாங்கள்

தாய்மொழியில் ஊமையென்றால்

துன்பம் இல்லையா!

சொந்த அடையாளங்களைத்

___தொலைத்து___ நிற்பதா! -நாங்கள்

தூயதமிழ் பேசக்கேட்டு

___மலைத்து___ நிற்பதா!

வேற்று மொழி தன்னிற் பல

கலைகள் கற்றாலும் -எங்கள்

___வீட்டுமொழி___ தமிழ் என்று

விரும்பிப் படிப்போமே!

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. கீழ்வரும் சொற்களை நிரற்படுத்தி எழுதுக.

உறங்கினார், பாடி, கதறியது, நடந்த, வென்ற, போய்

| வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| உறங்கினார் | நடந்த | போய் |
| கதறியது | வென்ற | பாடி |

2. எடுத்துக்காட்டுகள் தருக.

சினைப்பெயர் இலை

படர்க்கைப்பெயர் அவள், புறா

தன்மை வினைமுற்று வந்தேன்

பன்மை அவர்கள், அவை

இடப்பெயர் யாழ்ப்பாணம்

பலவின்பால் பறந்தன, ஆடுகள்

3. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.

ஒறுப்பு தண்டனை

உத்தி வழிமுறை

கடுகதி மிகுவிரைவு

செழுமை வளம்/ செழிப்பு

சுடும் அழிக்கும்/எரிக்கும்

கசடற குற்றமின்றி /பிழையின்றி

4. கீழ்வருவனவற்றிற்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

வினாச்சொல்லியம் *நீ எங்கே போகிறாய்?*

ஏவற் சொல்லியம் *நீ பாடத்தைப் படி !*

மெய்ப்பாட்டுச் சொல்லியம் *ஆகா ! எவ்வளவு அழகான பூங்கா !*

5. கீழ்வரும் சொற்றொடர்களைச் சொல்லியங்களாக எழுதுக.

கயிலை வன்னியனது ஆட்சி கொட்டியாரம் வரை

கயிலைவன்னியனது ஆட்சி கொட்டியாரம் வரை

சங்கவியின் தாய் பதறி

சங்கவியின் தாய் பதறி

கோதை வண்ணவண்ணப் பூக்களால்

கோதை வண்ணவண்ணப் பூக்களால்

*(பொருத்தமான விடைகள் )*

புள்ளிகள் 15

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நீர் குடிப்பதற்கும் தூய்மையாக இருப்பதற்கும் உதவுகிறது. நாம் தூய்மையான நீரைப் பருக வேண்டும். தூய்மையற்ற நீரைப் பருகுவதால் எமக்கு நோய்கள் வரும். நீரைக் குளம், கிணறு, ஆறு போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொள்கின்றோம். கிணற்று நீரும் குழாய் நீரும் குடிப்பதற்கு பயன்படுகிறது. நாம் நீரின்றி உயிர் வாழ முடியாது. நீர் எமக்கு மட்டுமன்றி விலங்குகள், பறவைகள், நிலைத்திணைகள் உயிர் வாழ்வதற்கும் பயன்படுகிறது.

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

புள்ளிகள் 05

7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

அ. தலையைக்காத்த தமிழ்

ஆ. நீர் விரும்பும் நாடு

அமைந்துள்ள இடமும் காலநிலையும்

பேசும் மொழி கல்வி, பண்பாடு

அங்கு நீர் கண்டு மகிழ்ந்தவையும் அறிந்தவையும்

நீர் அந்நாட்டை விரும்புவதற்கான காரணம்

இ. விளையாட்டுகள்

- விளையாட்டுகளின் பெயர்கள்
- உலகளாவிய விளையாட்டுகள்
- நீர் விரும்பும் விளையாட்டு
- விளையாட்டினால் ஏற்படும் நன்மைகள்

புள்ளிகள் 20